# போர்வாள்

நிழலில் உட்கார்ந்து கொண்டு வட்டிக் கடையில் பணத்தை எண்ணிப் பொழுது போக்கும் மார்வாரியின் தலையில் பதினாறு முழ நீளமுள்ள மஞ்சள் தலைப்பாகை அலங்காரமாக இருக்கிறது. ஆனால் மார்வாரி வாழ வட்டி கொடுக்கும் இந்த வண்டி இழுப்போன் தலையில் வெய்யில் மறைப்பதற்கு வேண்டிய அளவு கந்தையும் இல்லையே! —மு. வரதராசனார்


ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 2 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 சித்திரை 25
7—5—49 சனிக்கிழமை | வீச்சு 36


## சிலந்தி வலையில் சிக்கிய நேரு!




இந்தியாவின் சுதந்திரத்தை இம்மியளவும் விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று வீர முழக்கம் புரிந்துவந்த பண்டித நேருவை சாமர்த்தியம் மிகுந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் தன் சாகசத்தால் மயக்கிவிட்டது. ஏகாதிபத்யத்தின் புன் சிரிப்பிலும் கண் இமைப்பிலும் சொக்கிப்போன பண்டிதர், எந்த ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அகில உலகமும் வியக்கப் போராடினரோ அதே ஏகாதிபத்தியம் விரித்த வலையில்தானே சென்று சிக்கிக் கொண்டுவிட்டார்! பிரிட்டிஷ் காமென்வெல்த்திலே தொடர்ந்து இருக்கவும் பிரிட்டிஷ் மன்னரை தலைவராக ஏற்றுக்கொண்டு தலை குனிந்து நடக்கவும் சம்மதித்துவிட்டார். ஏமாந்தாயே பண்டிதரே என்று கூறியவண்ணம், சிலந்தி சிரிக்கிறது! பண்டிதர் திகைக்கிறார்!

**பகுத்தறிவே நம் போர்வாள்! திருக்குறளே நம் கேடயம்!**



★

# கலீலியோ

[வில்லாளன்]

★

கல்லூரிக்கு மாணவர் வெகு விரைவாகச் செல்லுகின்றனர், அங்கு ஒரு இளைஞன் கையில் பையுடன் செல்கின்றான். அவனுக்குப் பின்னால் நாலைந்து மாணவர்கள் வருகின்றார்கள்! அலங்கார ஆடையணிந்து ஒய்யார நடை போடுகின்றனர். நடக்கையிலே ஓர் ரசமான உரையாடல் அவைகளின் கூட்டுச்சரக்கு!

"இதோ போராண்டா! புலி, இல்லை, இல்லே கணக்கிலே புலி'

"பாட்டுவாத்தி மகனுக்கு இங்கு என்னடா வேலை?"

'இவன் அப்பனுக்கு பாடமட்டுமில்லே, கணக்கும் தெரியும்"

சரிதாண்டா! காலேஜுக்கு வந்து இரண்டுவாரமாகல்லே, அதுக்குள்ளே பெரிய கெட்டிக்காரனாட்டமா வாத்தியாரிடமெல்லாம் வாயாடறானே!"

இந்த வம்புப் பேச்சுகளெல்லாம் காதில் விழாமலில்லை அவ்விளைஞனுக்கு. கேளாக் காதனாய்ச் சென்றுவிடுவது அவன் வழக்கம். அவன் தனது தந்தையுடன் பல நாள் போராடினான் படிப்புக்காக, அவன் தந்தையோ கணக்கிலே அறிவுபடைத்தவர். காட்டு விலங்கும் கட்டுப்படும்படி பாடும் இசைவாணர் என்றாலும், தனது மகனுக்குக் கணக்கும் கானமும் கண்யமான நிலையளிக்காது என்றெண்ணி மகனை ஆடை அங்காடிக்காரர் ஆக்க முயன்றார். மகன் மன்றாடினான், தந்தை பலநாள் தடுத்தே வந்தார். கடைசியிலே வெற்றி பெற்றான் இளைஞன். கல்லூரியடைந்தான். கண கணவென மணியொலித்தது. மாணவர்கள் வகுப்பறையில் அமைதியாக அமர்ந்தனர். வகுப்பிலே முதல் பெயர் **கலீலியோ.** அவன்தான் அந்த இளைஞன்! கல்லூரியிலே முதல்மாணவன் என்றாலும் ஆசிரியரிடம் அடிக்கடி தகராறு, ஐயவினாக்கள் நூற்றுக் கணக்காக அடுக்குவான்!

அறிவு ஆட்சி கொள்ளவேண்டுமெனால் ஏன் எப்படி (Why and How) என்ற இரண்டு வினாக்கள் எழவேண்டும். உலகிலே என்றும் நிலைத்திருக்கும் கொள்கைகள் அறிவெனும் தீயில் காய்ச்சப்பட்டு, ஏன் எப்படி என்ற இரண்டு சம்மட்டிகளால் அடிக்கப்பெற்ற பின்னரே உருக்கொண்டிருக்கின்றன. இருளைப் போக்கப் பயன்படும் ஞாயிறும் திங்களும் போன்று அறியாமை இருட்டை யகற்றும பேரொலிகள் இந்த வினாக்கள். அறிவுலகத்தின் நுழைவுவாயில்கள் இந்தக் கேள்விகள். பகுத்தறிவுத் தடாகத்தின் பெரும் படிகள் அவைகள்.

பிளாரன்ஸ் நகரிலே பெரிய ஆசிரியரானார் கலீலியோ. பேராசிரியர் என்ற பேரைப் பெற்றார். பொதுவாவிலே அமோகமான வரவேற்பு. கல்லூரியிலே வேலை, ஏராளமான வரும்படி. கவலையற்ற வாழ்க்கை! அறிவுக்கு விருந்து ஆராய்ச்சிதான் என்று எண்ணியே போலும் என்றும் ஆராய்ந்து பார்க்கும் வேலையைப் பெரிதாகக்கொண்டார். திராட்சையாலேயே சூழ்ந்த ஒரு வண்ண மாளிகை. அதையடுத்து ஒரு பெரிய தொழிற்கூடம். இவை கணித ஆசிரியர் கலீலியோவுக்குச் சொந்தமாயின — சுகவாசத்திற்காக அல்ல, சொல்லாற்ற! சொல்லியதைச் செயலில் செய்து காட்டவுங்கூட! பெரும் பெரும் ஆட்ச[illegible]ளெல்லாம் வருவர் கலீலியோவின் அறிவு முத்துக்களை வாரிச்சேர்க்க. சில சமயங்களில் வகுப்பறை நிறைந்து வழிகளெல்லாம் மாணவக் கூட்டமாயிருக்கும், இன்னும் சில நாட்களில் நிற்கவுமிடமின்றித் திரும்பக்கூட நேரிடும்.

கலீலியோ இன்றும் மக்களின் மனக்கண்களின் முன் நடமாடுகிறார், உரையாடுகிறார்! அவர் கண்ட புதுமைகள் பலப்பல; அவைகளில் ஒருசில காண்க, அவரது பேரறிவின் பெருவலி கண்டு களிகொள்க!

நாழிகை வட்டிலின் நடுத்தண்டின் ஆட்டத்திலேயுள்ள அமைப்புமுறை கண்டார். அந்த Law of Pendulam த்தின் துணைகொண்டு பெரும் புகழ் கொண்டார். கல்லூரியிலே ஓய்வு வேளையிலே அரிஸ்டாட்டிலின் தத்துவங்களை அலசியலசிப் பார்த்தார்! குறை கண்டார்! எடையிலே வேற்றுமையுள்ளவை உருவம் அளவு இவைகளிலே ஒற்றுமையுடைய பொருள்களிரண்டின் வீழ்வுகளில் வித்தியாசம் கிடையாது. இது அரிஸ்டாட்டிலின் தத்துவத்திற்கு மறுப்புரை. இதைக் கண்டு கல்லூரியாசிரியர் கனன்றனர், நாட்டு மக்கள் வெகுண்டனர். அஞ்சினாரா? இல்லை! வாருங்கள் என்று வரவேற்றார், பாருங்கள் என்று பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்திலிருந்து பரிசோதனை செய்து காண்பித்தார். தவறென்று தடுத்துரைக்க முடியாவிட்டாலும் கலீலியோ குறையுடையவர் என்று கூடிக்கூடிப் பேசினர்.

1609ம் ஆண்டிலே ஆன்ஸ் லிப்பர்ஷி என்ற ஆடி அங்காடிக்காரர் (Dutch spectacle-maker) செய்த தூரப் பார்வைக் கண்ணாடியினடிப்படையில் ஓர் புதிய முறையான கண்ணாடியைச் செய்தார் கலீலியோ. அதன் ஒரு முனையிலே இணைகுவிந்த கண்ணாடியும் மற்றோர் முனையிலே இணைகவிந்த கண்ணாடியும் அமைந்த ஓர் புதுமை கண்டார். உலகமே வியந்தது! பல பாகங்களிலிருந்தும் கண்ணாடிக்குக் கிராக்கி கிட்டியும் அதைச் சட்டை செய்யாது இன்னும் பல நாள் உழைத்து உழைத்து முடிவிலே பலப்பல அறிஞர்களும் வியக்கும் ஓர் புதிய கண்ணாடியை மீண்டும் கண்டார். வாழ்த்துரை

(11-ம் பக்கம் பார்க்க)

# ஏன்? எப்படி? எதற்காக?

[இளஞ்செழியன்]

[சுயமரியாதை இயக்கமும் திராவிடர் கழகமும் தமிழகம் எங்கணும் காட்டுத் தீப்போலப் பரவிவரும் இந்நாளில் அந்த இரு இயக்கங்களின் கொள்கை—திட்டம்—நடைமுறை ஆகியவற்றைப் பற்றிய பல்வேறு ஐயங்கள் தமிழகத்தில் அங்கங்கே உலவிக் கொண்டிருப்பது இயற்கை. அந்த ஐயங்களை அகற்றுவதற்கென்றே சென்ற இதழிலிருந்து தொடங்கப்பட்டுள்ள புதுப்பகுதி இது. கேள்விகள் ஏராளமாக வந்து குவிந்த வண்ணம் உள்ளன. ஆனால் போர்வாளின் அளவு சிறிது. சில கேள்விகளுக்கு மட்டுமே இந்த வாரம் விடை தரப்படுகின்றன. பிற, பின்!]

### 1. திராவிடர் கழகம் அரசியல் தொடர்பு அற்றது என்கிறீர்கள்! அதே நேரத்தில் திராவிட நாடு பிரியவேண்டும் என்கிறீர்கள்! நாட்டுப் பிரிவினை அரசியல்தானே? ஆம் எனில் ஏன் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகின்றீர்கள்?

திராவிடர் கழகம் வெறும் அரசியல் கழகமல்ல, திராவிடர் கழகம் ஈடுபட்டிருப்பது சாதாரண அரசியல் வேலையில் அல்ல, திராவிடர் கழகம் அரசியல் சூதாடிகளின் மன்றமல்ல என்றெல்லாம் பேசும்போது நாங்கள் அரசியல் என்ற சொல்லால் குறிப்பிடுவது சட்டசபை அரசியலை! (Legislature Politics) தேர்தலுக்கு நிற்பது, சட்டசபைகளைக் கைப்பற்றுவது, மந்திரிசபை அமைப்பது, கோஷ்டி சண்டை போடுவது, ஆண்டுக்கொருமுறை பிரதமரைக் கவிழ்ப்பது ஆகிய இவை மட்டும்தான் அரசியல் என்று சொல்லப்படுமானால், அத்தகைய அரசியல் கழகமல்ல திராவிடர் கழகம் என்றுதான் கூறிவருகிறோமே தவிர. அரசியல் என்பதே அடியோடு உதவாது என்று நாங்கள் எப்போதும் கூறியதில்லை. திராவிடநாட்டுப் பிரிவினை அரசியல் பிரச்சினைதான் என்று கொள்ளப்பட்டால் அத்தகைய அரசியலை கழகம் எப்போதும் மறுத்ததே கிடையாது. நான் கூறும் இந்த "அரசியல் விளக்க"த்தை நீவிர் ஏற்றுக் கொண்டால், பிறகு, முன்னுக்குப் பின் முரண் என்ற பிரச்சினைக்கே இடமில்லை!

### 2. திரு ஈ. வெ. ராவை பெரியார் என்றும், திரு. அண்ணாதுரையை தளபதி என்றும் அழைக்கிறீர்களே, எந்த சர்வகலாசாலை இவர்களுக்கு இந்தப் பட்டங்களைக் கொடுத்தது?

நல்ல வேளை! சென்னை சர்வகலாசாலையா அல்லது அண்ணாமலை சர்வகலாசாலையா என்று கேட்காமல் போனீரே—அதுவரைக்கும் உமது அறிவுக் கூர்மையை மெச்சிக்கொள்ள வேண்டியதுதான்! எந்த சர்வகலாசாலை அளித்த பட்டங்கள் என்றுதானே கேட்கிறீர், கூறுகிறேன், கேளும்! உலகம் எனும் சர்வகலாசாலை உவந்தளித்த பட்டங்கள் இவை! அது சரி இளஞ்செழியனாரே அந்த சர்வகலாசாலை எங்கிருக்கிறது என்று அடுத்த வாரம் இன்னொரு கேள்வி கேட்டுவிடாதீர், இப்போதே பதில் கூறிவிடுகிறேன், அந்த சர்வகலாசாலை எங்கும் இருக்கிறது!

### 3. திராவிடத் திருநாடு ஏற்படும்போது ஒரு பார்ப்பனன்கூட இருக்கமாட்டானா?

எல்லாப் பார்ப்பனரும் இருப்பர்! நமது ஆசையே பார்ப்பனர் இருக்கக்கூடாதுஎன்பதல்ல! பார்ப்பனர்கள் பூதேவர்களாக இருக்கக் கூடாது என்பதுதான்! பார்ப்பனர்கள் தங்களை மனிதப் பிறவியைவிட மேலான பிறவிகள் என்று கூறிக்கொண்டு, நம்மை, மனிதப் பிறவியைவிட கீழான பிறவி என்று பன்னெடுங்காலமாகக் கூறிவருகின்றனர். இந்த ஏற்றத் தாழ்வு நீங்கி, அவர்கள் பூதேவர் ஸ்தானத்திலிருந்து சாதாரண மனிதர் என்ற ஸ்தானத்திற்கு இறங்கி வரவேண்டும் என்பதும், நாம், சூத்திரர்கள் என்ற கீழ் நிலையிலிருந்து மனிதர்கள் என்ற நிலைமைக்கு உயர்த்தப்படவேண்டும் என்பதும், ஆகக்கூடி, இருவரும் ஒத்த செல்வம், ஒத்த கல்வி, ஒத்த உரிமை படைத்த தோழர்களாக நாட்டில் உலவவேண்டும் என்பதும் தான் திராவிடர் கழகக் குறிக்கோள்களே தவிர பார்ப்பனர்களே இருக்கக் கூடாது என்பது அல்ல! நிச்சயமாக அது அல்ல நமது குறிக்கோள்!

### 4. தோழர் இரா. நெடுஞ்செழியன் தாடியை எடுத்துவிட்ட காரணம் என்ன?

அவர் எந்தக் காரணத்திற்காகத் தாடியை வைத்துக்கொண்டாரோ அதே காரணத்திற்காகத்தான் எடுத்துவிட்டார்! புரியவில்லையா? புரியும்படி கூறுகிறேன்: முன்பு தாடி வைத்துக்கொண்டால் அழகாக இருக்கும் என்று எண்ணி வைத்துக்கொண்டார். இப்போது, தாடி இல்லாமல் இருந்தால் அழகாக இருக்கும் என்று எண்ணி எடுத்துவிட்டார்! இரகசியம் இவ்வளவுதான்!

### 5. தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் தேவையா? ஏன்?

தேவை! நிச்சயமாகத் தேவை! ஏனெனில் தமிழில் மொத்தம் 247 எழுத்துக்கள் இருக்கின்றன. இவ்வளவு அதிகமாக எழுத்துக்கள் இருப்பதால் பலவித சங்கடங்களும் தொல்லைகளும் நேரக்கேடும் ஏற்படுகின்றன. குழந்தைகள் இவ்வளவு அதிகமான எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றன. எழுத்துகள் இவ்வளவு அதிகமாக இருப்பது கல்வியின் விரைவான வளர்ச்சியை மிகவும் தடைப்படுத்துகிறது. தமிழ் டைப்ரட்டர் அமைக்கும்போது எழுத்துப்பெட்டி மிக அகலமானதாகவும் பெரிதாகவும் அமைக்கப்பட நேரிடுகிறது. அதோடு தமிழ் 'டைப்' அடிக்கக் கற்றுக்கொள்வதும் டைப் அடிப்பதும் மிகுந்த தொல்லையுடன் கூடியவை ஆகிவிடுகின்றன. மேலும் எழுத்துக்களின் மிகுதியான தொகைதான், ஆங்கிலத்தில் இருப்

(10-ம் பக்கம் பார்க்க)

# சர்ச்சிலுக்குக் களிப்பூட்டும் சம்பவம்!

வின்ஸ்டன் சர்ச்சில் என்றால் கடைந்தெடுத்த பிற்போக்குச் சக்தி என்று பொருள்!

வின்ஸ்டன் சர்ச்சில் என்றால் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வெற்றியின் நடமாடும் சின்னம் என்று பொருள்!

வின்ஸ்டன் சர்ச்சில் என்றால் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள முட்டுக்கட்டை என்று பொருள்!

வின்ஸ்டன் சர்ச்சில் என்றால் சிதைந்து கொண்டிருக்கும் சீமான்கள் உலகத்தின் கடைசி ஆயுதம் என்று பொருள்!

வின்ஸ்டன் சர்ச்சில் என்றால் பழமைக் குட்டையில் ஊறித் தேர்ந்த மட்டை என்று பொருள்!

வின்ஸ்டன் சர்ச்சில் என்றால் சுதந்தரம் சமத்துவம் சகோதரத்துவம் மறுமலர்ச்சி புத்துணர்ச்சி புரட்சிஆர்வம் முதலிய நற்பண்புகள் அத்தனைக்கும் முதல்தரமான விரோதி என்று பொருள்!

சர்ச்சில் மகிழ்ச்சி அடைகிறார் எனில் மனித சமுதாயத்திற்கு நல்லதோர் சகாப்தம் உருவாக வேண்டும் என்று எண்ணுகிற நல்லறிவாளர்கள் அத்தனை பேரும் கண்ணீர் சிந்திக் கதறி அழவேண்டிய துக்ககரமான நிகழ்ச்சி ஏதோ ஒன்று நடந்துவிட்டது என்று அர்த்தம்.

சர்ச்சில் கண்ணீர் சிந்துகிறார் எனில் சமுதாயம் சுகப்படவேண்டும் என்ற நற்கருத்துடையோர் யாவரும் மனமகிழ்ச்சி யுறத்தக்க நல்ல சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்று அர்த்தம்.

மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் சிறிதும் நம்பிக்கை அற்றவர் சர்ச்சில்! இப்போது இருக்கும் சமுதாய அமைப்பு, பொருளாதார ஏற்றத்தாழ்வு, முடியாட்சி முறை, உளுத்துப்போன பழைய சமூகப் பழக்க வழக்கங்கள்—கொள்கை கோட்பாடுகள்—எண்ணம் ஏற்பாடுகள் மதக் கருத்துகள் யாவும் அப்படி அப்படியே என்றென்றும் நிலைத்திருக்கவேண்டும் என்ற "நல்ல" நோக்கம் படைத்தவர் சர்ச்சில்! எந்தத் துறையிலும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் எத்தகைய மாறுதலும் தேவையில்லை என்பது அவருடைய கட்சி. அந்தக் கட்சி நியாயமானது என்பது அவருடைய நம்பிக்கை!

சீர்திருத்தமா — கூடாது என்பார்! மூடநம்பிக்கைகளை முறித்துத் தள்ளுகின்ற முக்கியமான வேலையா—சே! சே! அது எனக்குத் தேவையில்லை என்பார்! இன்றைய சமுதாயத்தை மாற்றி அமைத்து மறுகோலம் செய்வதா- அது வெறும் பித்தர் செயல் அல்லவோ என்பார்! புரட்சியா—அது எனக்கு எட்டி என்பார்! புதியதோர் உலகமா—இருக்கும் உலகத்திற்கு என்ன கேடு என்பார்! பாட்டாளி மக்களுக்குப் புது வாழ்வு வேண்டும் என்றாலோ சீறி விழுவார் அப்படிப் புகல்பவர் மீது!

பழமை! பிற்போக்கு! குருட்டுப் பிடிவாதம்! இறந்த காலமே பொற்காலம் என்ற எண்ணம்! ஏகாதிபத்திய வெறி!—இவைதான் சர்ச்சில்!

பிரிட்டன், இந்தியாவுக்கு விடுதலை ஆட்சியைத் தந்தபோது, உலகம் முழுவதுமே அந்த நற்செயலைக்கண்டு பூரித்தது. ஆனால் ஒருவர், ஒரே ஒருவர், ஒரே ஒரு மனிதர், நாங்கள் பற்பல நூற்றாண்டுகளாகக் கட்டிக் காத்துவந்த மகத்தான சாம்ராஜ்யம் மடமடவெனக் கரைந்து போகிறதே என்று கதறிக் கதறி அழுதார்! எங்கள் மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் அதிகாரம் குறைந்து போகிறதே என்று காட்டுக் கூச்சலிட்டார்! அவர்தான் சர்ச்சில்!

உலகத்தில், எங்கெங்கே, என்னென்ன பிற்போக்குச் சக்திகள் உண்டோ அவை அத்தனையையும் ஒன்று திரட்டி ஓர் உருவாக்கி மொத்தமாகப் பார்த்தால் வருகிறதே ஓர் உருவம்—அதுதான் சர்ச்சில்! மகாகனம் என்ற மகத்தான பட்டத்தைப் பெற்றிருக்கும் வின்ஸ்டன் சர்ச்சில்!

**அந்தச் சர்ச்சிலுக்குக் களிப்பூட்டும் சர்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றிருக்கிறது!**

* * *

**சர்ச்சிலுக்குக் களிப்பூட்டும் சம்பவம்!** இந்த வாசகம் ஒன்றே போதும், "சம்பவம்" எவ்வளவு கேடு பயக்கத்தக்கதாக இருக்கும் என்பதை எடுத்துக்காட்ட! சர்ச்சிலுக்குக் களிப்பூட்டும் சம்பவம் என்ன உலக முன்னேற்றத்திற்கு உகந்ததாகவா இருக்கும்? உதவாக்கரைத் திட்டமாகத்தானே இருக்கும்? புலி சீறிப் பாய்கிறது என்றால் எதிரே வரும் மான்குட்டிக்கு ஆபத்து என்பதைப் போல, வெள்ளம் கரைபுரண்டோடி வருகிறது என்றால் நடுவே இருக்கும் ஊர்களுக்கு அபாயம் நிச்சயம் என்பதைப் போல, புயல் வீசுகிறது என்றால் படகு கவிழ்வது உறுதி என்பது போல, ஓடிக்கொண்டே இருக்கும் ரயில் தண்டவாளத்தை விட்டுப் பெயர்ந்தது என்று சொன்னால் பலருக்குக் காயமும் சிலருக்கு உயிர்ச்சேதமும் ஏற்படத்தான் செய்யும் என்பது போல, சர்ச்சில் களிப்படைகிறார், சர்ச்சில் முகத்தில் புன்னகை தவழ்கிறது—சர்ச்சிலின் கண்களிலே ஆனந்தம் நர்த்தனமாடுகிறது—சர்ச்சில் இன்ப புரிப் பயணத்தில் இறங்கிவிட்டார்-சர்ச்சிலுக்கு களிப்பு எல்லையின்றி ஏற்பட்டுவிட்டது என்றெல்லாம் சேதி வருமானால் நிச்சயமாக அதற்குப் பொருள் பிற்போக்குச் சக்திகளுக்கு மகிழ்ச்சி யூட்டத்தக்க சம்பவம் ஒன்று நிகழ்ந்துவிட்டது என்பதுதானே!

* * *

பிரிட்டன், சென்ற வாரம், கனடா, ஆஸ்திரேலியா, நியூஜீலாந்து, தென்னாப்பிரிக்கா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய பல்வேறு காமன்வெல்த் நாடுகளின் பிரதிநிதிகளையும் இந்தியாவின் பிரதிநிதியாக பண்டித ஜவகர்லால் நேருவையும் சீமைக்கு அழைத்து ஒரு மாநாடு கூட்டிற்று. மாநாட்டில் விவாதிக்கப்பட்ட மிக முக்கிய

மான பிரச்சினை, பிரிட்டிஷ் காமன்வெல்த் என்று அழைக்கப்படுகிற ஒருவித அமைப்பிலே இந்தியா இனியும் தொடர்ந்து இருக்குமா, இருக்க விரும்புகிறதா, விரும்பினால் அது சட்டப்படி சரியா, அதை அனுமதிக்க முடியுமா என்பது தான்! ''பிரிட்டிஷ் காமன்வெல்த்'' என்பது பிரிட்டனையும், பிரிட்டன் முன் ஒரு காலத்தில் ஆண்டு கொண்டிருந்து பிறகு விடுதலை அடைந்துவிட்ட அல்லது பிரிட்டனால் இப்போதும் ஆளப்படுகின்ற அல்லது பிரிட்டனுடன் இரத்தத் தொடர்புள்ள அல்லது பிரிட்டனிலிருந்து வாணிபத்திற்காகவோ பிழைப்பிற்காகவோ ஏதோ ஒரு காலத்தில் தப்பிச் சென்று, எங்கோ சென்று தங்கி, அங்கே தனி நாடு கண்டு, தனி மக்கட் கூட்டமாக வாழுகின்ற அல்லது பிரிட்டனிடத்தில் ஏதோ ஒருவிதத்தில் இல்லாவிட்டால் மற்றொரு விதத்தில் நெருங்கிய தொடர்புள்ள பல நாடுகளையும் ஒன்று சேர்த்து இணைத்து வைத்திருக்கும், நெகிழும் தன்மை படைத்த ஒருவித பிணைப்பிற்கு, பந்தத்திற்கு, பாசத்திற்கு, அமைப்புக்குத் தரப்பட்டுள்ள பெயர்! இதுபோது, பிரிட்டனும், கனடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, இலங்கை, பாகிஸ்தான், நியூஜிலாந்து, இந்தியா ஆகிய ஏழு நாடுகளும் இந்த பிரிட்டிஷ் காமன்வெல்த் என்ற தலைப்பின் கீழ் வருகின்றன. இந்த் ''காமன் வெல்த்'' என்ற கழகத்தில் ஓர் உறுப்பினராக ஏதேனும் ஒரு நாடு இருக்கவேண்டுமானால், அந்த நாடு குறைந்தபட்சம், பிரிட்டிஷ் மன்னருக்கும் அவர்தம் மணிமுடிக்கும் விசுவாசம் உடையதாகஇருக்கவேண்டும். அந்த நாட்டின் ஆட்சியிலே பிரிட்டிஷ் மன்னருக்கு உரிமை இருக்காது, மன்னர் அந்த நாட்டை ஆள மாட்டார், மன்னருக்கு பிரஜைகள் அல்ல அந்த நாட்டு மக்கள், என்றாலும் அந்த நாடு பிரிட்டிஷ் மன்னரின் 'முடி'யிடத்திலே பக்தி செலுத்தவேண்டும். இந்தப் 'பக்தி'தான் ஒரு நாடு காமன்வெல்திலே இருக்கிறது என்பதற்கான அடையாளம்! கனடாவும் ஆஸ்திரேலியாவும் தென்னாப்பிரிக்காவும் நியூஜிலாந்தும் வெள்ளை நாடுகள்! பிரிட்டனைத் தங்கள் பிறந்த அகமாகக் கொள்ளும் இயல்பும், பிரிட்டனுடன் இரத்தத் தொடர்பும் கொண்டவை அவை! எனவே அவை நான்கும் பிரிட்டிஷ் காமன்வெல்திலே இருக்கவும், பிரிட்டிஷ் மன்னரின் முடியிடத்திலே 'பக்தி'யுடன் நடக்கவும் சம்மதிப்பதிலே வியப்பில்லை! வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் அவை பிரிட்டனுடன் வாழ்ந்து பிரிட்டனுடன் வீழவேண்டியவை! பிரிட்டனின் உயர்வு தாழ்வு அவற்றின் உயர்வு தாழ்வு! பிரிட்டனின் சுகதுக்கங்கள் அவற்றின் சுகதுக்கங்கள்! பிரிட்டன் 'தாய்' என்றால் அவை, அத் தாயின் 'பிள்ளைகள்' போன்றவை! ஒரு அன்னைக்குத் தனயரிடத்திலே பற்றும், தனயருக்குத் தாயிடத்திலே அன்பும் இருப்பது இயற்கை! எனவே பிரிட்டனுக்கு கனடா — ஆஸ்திரேலியா—தென்னாப்பிரிக்கா — நியூஜிலாந்து மீது பற்றும் பாசமும், இவற்றிற்கு பிரிட்டன்மீது ஆசையும் நேசமும், இரு சாராருக்கும் ஒரே குடும்பத்தில் இருக்கவேண்டும் என்ற ஆர்வமும் எண்ணமும் எழாமல் போகுமா? எழத்தான் செய்யும்! எழத்தான் செய்கிறது! எழுந்ததன் விளைவாக உருவான ''குடும்பம்''தான் பிரிட்டிஷ் காமன்வெல்த்! ஒரு குடும்பத்திற்கு அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் இப்படி இப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று சட்டதிட்டங்கள் எதுவும் கிடையாது. தாயிடத்திலே மகன் எப்படி நடந்து கொள்ளவேண்டும், மகனிடத்திலே தந்தை எப்படி இருக்கவேண்டும், அண்ணனுக்கும் தம்பிக்கும் இருக்கவேண்டிய சரியான உறவு முறை எது என்பன போன்றவற்றிற்கெல்லாம் எழுத்துமூலமான சட்டம் எந்தக் குடும்பத்திலும் கிடையாது. ஆனால் இரத்தபாசம் அந்தக் கேள்விகளுக்கெல்லாம் சரியான விடையை நடைமுறையில் அனுபவ பூர்வமாகத் தந்துவிடுவது தான் எந்தக் குடும்பத்திலும் வாடிக்கை! அதைப்போலத்தான், பிரிட்டிஷ் காமன்வெல்த், இந்த **நான்கு நாடுகள் என்ற தனயர்களும் பிரிட்டன் என்ற அன்னையும் மட்டும்** சேர்ந்திருக்கும் ஒரு குடும்பமாக இருந்தவரை எவ்வித சிக்கலுமின்றி நடந்து வந்தது. ஆனால் கடந்த இரண்டாண்டு காலத்திற்குள்ளாக இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளும் விடுதலை பெற்று, சொந்த சர்க்கார் அமைத்து, குடியாட்சியை நிறுவி, தம்மைத் தாமே ஆண்டு வரும் நிலைமை ஏற்பட்டபின், இந்த நாடுகளையும் கூட காமன்வெல்த் என்ற குடும்பத்திலே சேர்த்துக் கொள்வது நல்லது—எதிர்காலத்திலே உலகப் போர் ஏதேனும் மூளுமானால் இவை மூன்று நாடுகளும் தன்பக்கம் இருப்பது, தான் வெற்றி புரியை அடைவதற்குக் கிடைக்கும் அற்புதமான உதவியாக இருக்கும்—ஏனெனில் இவை மூன்று நாடுகளும் ஆசியாக் கண்டத்தின் மிக முக்கியமான இடங்களில் அமைந்திருக்கின்றன-எனவே இவற்றை எப்படியேனும் தன் பக்கம் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று பிரிட்டன் எண்ணிற்று. தங்கள் வெள்ளைக் குடும்பத்திலே இந்தக் ''கறுப்பர்கள்'' மூவரையும் சரிசம அந்தஸ்துடையவர்களாகச் சேர்த்துக் கொள்வதா, இது நமக்கு இழிவல்லவா, நம் வெள்ளைத்தோல் கறுப்புத் தோலைவிட ''ஒசத்தி'' அல்லவா என்றுதான் கனடா முதலிய நான்கு வெள்ளை நாடுகளும் முதலில் எண்ணமிட்டன, என்றாலும் பிரிட்டன், ''எதிர்காலத்திலே உலகப் போர் ஏற்பட்டால் ''இதுகள்'' நம் பக்கம் இருப்பது நமக்குத்தானே அனுகூலம்!'' என்பதை எடுத்துக் காட்டியதும், இந்த நாடுகள் இந்தியாவையும் பாகிஸ்தானையும் இலங்கையையும் காமன்வெல்த்திலே சேர்த்துக் கொள்ளச் சம்மதித்தன! இந்த நிலையிலேதான், சீமையில்; காமன் வெல்த் மாநாடு, சென்ற வாரம், பிரிட்டனால் கூட்டப்பட்டது. மாநாட்டின் போது, இலங்கையும் பாகிஸ்தானும், காமன் வெல்தில் இருக்கவும், பிரிட்டிஷ் மன்னருக்கு விசுவாசம் தெரிவிக்கவும், அவர்தம் மணிமுடியிடத்தில் ''பக்தி'' காட்டவும் ஒப்புக்கொண்டுவிட்டன. எனவே அவற்றைப் பொறுத்தவரை சிக்கல் எதுவும் ஏற்படவில்லை! ஆனால் இந்தியாவின் சார்பில் மாநாட்டிற்குச் சென்றிருந்த பிரதமர் நேரு, ''நாங்கள் தனி நாட்டினர் அல்லவா! பிரிட்டிஷ் மன்னருக்கு, சுதந்தர புருஷர்களாகிய நாங்கள் எப்படிக் கட்டுப்பட முடியும்? மன்னருக்குப் பக்தி செலுத்துவது எங்கள் சுதந்தரத்திற்குப் பங்கம் விளைத்ததாக ஆகாதா?'' என்றெல்லாம் வீராவேசமாகப் பேசினார், மன்னருக்குப் பக்தி என்ற வாசகம் இருக்கும்வரையிலே இந்தியா காமன் வெல்திலே

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 சித்திரை 25
7—5—49 சனிக்கிழமை

# ஐயையோ! உங்கட்கு இரக்கமில்லையா?

"அட பாவிகளே! எம் மவனை இழுத்தும் போறிங்களே! உங்களுக்கு இரக்கம் இல்லையா! நீங்க ஒரு தாய் வயிற்றிலே பிறக்கிலியா! உங்க மனசெல்லாம் என்ன கல்லா! எனக்கிருக்கிற ஒரே ஒரு மவனுச்சே அவன்! என் குடும்பத்தையே அவன் தானே காப்பாத்தனும்! அவனை இழுத்தும் போறிங்களே! இது நியாயமா ஒங்களுக்கு? முறையா? தர்மமா? அடுக்குமா? உங்க பெண்டு பிள்ளைங்க வாழுமா? ஏங் குடும்பம் அழியருப்போல ஒங்க வீடும் அழிஞ்சிதானே போவும்! ஏங் கண்மணியை விட்டுடுங்க ஒங்களுக்கு கோடி புண்ணியம் உண்டு நீங்க மஹாராஜரா இருப்பீங்க.............விடமாட்டீங்களா? அட பாவிங்களே! என் பெத்த வயிறு எறியுதடா! ஒங்க வாழ்வும் இப்படித்தான் போகுமடா! என் பிள்ளைக்கி விலங்கைப் போட்டு ஜெயிலுக்கு இழுத்தும் போறீங்களே! ஐயையோ நான் என்ன செய்வேன்! தெய்வமே—உனக்குக் கண்ணில்லையா?"

"ஏம்மா, ஏன் இப்படி கூச்ச போடறே! என்ன நடந்திட்டுது இப்போ? உன் பையன் பங்களாத் தெருவிலே பச்சை செட்டியார் வீட்டிலே ஆயிரம் ரூபா, பட்டப் பகலிலே திருடியிருக்கிறான்! ராஜ வீதி ஷராப் கடையிலேருந்து 200 ரூ நகைகளை அப்படியே அபேஸ் பண்ணிண்டு வந்துட்டான்! போதாத குறைக்கு பொன்னியம்மா குறைன்னுவாங்க அது மாதிரி மூக்காத்தா தெரு முனியாண்டியோட சண்டைபோட்டு அவன் கை எலும்பை வேறே முறிச்சிட்டான்! வந்து அரெஸ்ட் செய்தா நீ ஆஹா ஊஹான்னு கூச்ச போடறயே நியாயமா இது? உம் மவன் இருந்தா என்ன, என் மவன் இருந்தாதான் இன்னமா, தப்பு தப்புதானே!......டே 214, ம்! நடடா நட! இவனை இழுத்தும் போயி 'லாக் அப்'லே போடு! ஏண்டா நிக்கிறே பேந்தப் பேந்த முழிச்சிண்டு! இந்த அம்மா கூச்ச போடருங்களேன்னு பாக்கிறியா! அவங்க கூச்சதாண்டா போடுவாங்க இப்போ? பையன் திருடனேன், ஊர் சண்டை வலிச்சானே, அப்ப எங்க போனாங்க இந்த அம்மா இப்ப வந்துட்டாங்களே வரிஞ்சி கட்டிக்கினு! 214! புறப்படு! போவோம்!"

காந்தலிங்கம், வாலிபன்! ஆனால் குற்றவாளி! இரண்டு திருட்டுக் கேஸ்—ஒரு அடிதடிகேஸ்—மூன்று குற்றம் அவன் மேலே! போலீசார் கண்டு பிடித்து விட்டனர்! ஒரு சப்—இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டேபில்களுமாக காந்தலிங்கம் வீட்டிற்கு வருகின்றனர்! கைது செய்கின்றனர் காந்தலிங்கத்தை! கையிலும் காலிலும் விலங்கு காந்தலிங்கத்திற்கு! இழுத்துச் செல்லப்படுகிறான் கோர்ட்டுக்கு! தாய் கதறிக் கதறி அழுகிறாள், போலீசார் மீது சீறிச் சீறி விழுகிறாள், சப்இன்ஸ்பெக்டர் மீதும் கான்ஸ்டேபில்கள் மீதும் வசைமாரியைப் பொழிகிறாள், ஈவு இரக்கம் இல்லையா என்று கேட்கிறாள், ஆனால் போலீசார், "அம்மா! இது எம் கடமையம்மா கடமை!" என்று கூறி, கோர்ட்டுக்கு இழுத்துச் சென்றுவிடுகின்றனர். தாய் கதறுகிறாள் எற்பதற்காக, போலீஸ், தன் கடமையை மறக்க முடியுமா?

காந்தலிங்கம் குற்றம் செய்தான்—ஒன்றல்ல அவன் செய்த குற்றம், பல!—குற்றவாளியை கூண்டில் கொண்டுவந்து நிறுத்தவேண்டியது போலீசின் கடமை—அந்தக் கடமையை நிறைவேற்றியது போலீஸ்—தாய் கதறுகிறாள்—காரணம் அவள் தாய்! அவளே கதறுகிறாள்—ஆனால் வருகின்ற போலீசார் கடமை உணர்ச்சியையே, நியாயத்தை நிலைநாட்டும் நற்பண்பினையே, குற்றத்தைத் தண்டிப்பதே முறை என்னும் உயர் கருத்தினையே கொண்டவராக இருப்பின், தாயின் கதறல் ஒலி கேட்டு அவர்கள் எங்ஙனம் தம் பணியினின்று வழுவ முடியும்? சமுதாயத்தில் சாந்தியையும் சமாதானத்தையும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கென்றே அமர்த்தப் பட்டிருக்கும் அவர்கள், எப்படி அந்தக்கடமையை தாயின் பரிதாபக் குரலுக்காக மறந்துவிட முடியும்? எனவே தான் அவர்கள் தாயின் கண்ணீரையும், கருத்தற்ற கதறல் மொழிகளையும், கண்ணியமற்ற வசைச் சொற்களையும் சற்றேனும் பொருட்படுத்தாது குற்றவாளியைக் கூண்டிலேற்றும் நற்பணியைச் செய்தனர்! நல்லோர்தம் பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் நிச்சயம் உரியவர் ஆயினர்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் **டாக்டர் பட்டாபி சீத்தாராமையா**, மைசூர் பத்திரிகாசிரியர்கள் கழகக் கூட்டத்தில் இந்தக் கிழமை பேசி இருப்பதை நாளிதழ்களில் கண்டதும் நம் மனக்கண் முன்னல் குற்றவாளி காந்தலிங்கம் — கதறி அழும் தாய்—கடமையை மறவாத போலீஸ் இம்மூவரும்தான் வந்து நின்றனர்.

மைசூர் கூட்டத்தில் டாக்டர் பட்டாபி, திரண்டு குழுமியுள்ள இதழாசிரியர்களை நோக்கி, "நண்பர்களே, நல்ல தோழர்களே, நீங்கள் சர்க்காரைக் குற்றம் சொல்கிறீர்கள்—அடிக்கடி குறை கூறுகிறீர்கள் — மிகக் காரசாரமான நடையில் அவர்களைத் தாக்குகிறீர்கள்—சர்க்கார், நம்ம சர்க்கார் அல்லவா—குற்றம் கூறலாமா—இவ்வளவு கடினமாகப் பேசலாமா—ஈவு இரக்கம் வேண்டாமா—நடப்பது நமது சர்க்கார் ஆயிற்றே என்பதற்காக கொஞ்சம் பரிவு பச்சாத்தாபம், இரக்கம், அன்பு இருக்க வேண்டாமா—குற்றங்களை

(12'ம் பக்கம் பார்க்க]

**ஆச்சரியம் ஆனால் உண்மை!**

# மூளைக்கு முப்பதாயிரம்!

லிஸ்பன் நகரிலே, தெருவின் குறுக்கே பிரிஸ்டஸ் என்பவர் அஜாக்கிரதையாகச் சென்று கொண்டிருந்தார். எதிரே டிராம் வண்டி தன்னை நோக்கி விரைந்து ஓடி வருவதைக் காணவில்லை. சமீபத்தில் வந்தபோதுதான் கவனித்தார்; டிராம் பாதையிலிருந்து அப்பால் குதித்து ஓடித் தப்பினார். அச்சமயம் அவர் மனம் எங்கோ சென்றுகொண்டிருந்தது. பாட்டனார் சமீபத்தில்தான் 2000 பவுன் வைத்துவிட்டுப் 'பரலோகம்' சென்றிருந்தார். இந்த மூலதனத்தைக் கொண்டு என்ன தொழில் செய்யலாம் என்று ஆலோசித்துக் கொண்டிருந்ததால் தான் அவருக்கு டிராம்வண்டி எதிரே வருவது புலப்படவில்லை! ஆனால் உயிருக்கே ஆபத்து விளைவிக்க விருந்த இந்த சம்பவம் அவருக்கு ஒரு புதிய வழியை உணர்த்தக் காரணமாயிருந்தது.

டிராம் வண்டி நல்ல லாபந்தரக் கூடியது தானே என்று அவர் மனதிற்குப் பட்டது. ஆனால் அந்நாட்டில் டிராம் வண்டிகளை நகராட்சிக் கழகத்தாரே நிர்வகித்து வருகின்றனர். அவர் மூளை வேலை செய்தது. டிராம் வண்டியை ஓட்டினாலோ இலாபம் ஏராளமாகக் கிடைக்கும் ஆனால் டிராம் தொழிலோ அந்த நகரில் நகராட்சிக் கழகத்தாரின் உடைமை ஆகி இருக்கிறது. என்ன செய்வது என்று எண்ணிப் பார்த்ததும் அவருக்கு ஒரு 'யோசனை' தோன்றிற்று. உடனே நகராட்சியினருக்கு டிராம் வண்டிப் போக்குவரத்து நடத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட அதிகாரப் பத்திரத்தைத் தேடிப் பிடித்துப் பரிசோதனை செய்தார். அப்படிப் பார்த்ததில் அந்தப் பத்திரத்தில் பல ஓட்டைகள் இருப்பது அவருக்குத் தென்பட்டது. அந்த ஓட்டைகளைச் சரியானபடி பயன்படுத்திக் கொண்டால், தான், ஒரு பெரும் பணக்காரன் ஆகிவிடலாம் என்று அவருக்குத் தோன்றிற்று.

லிஸ்பனில் போடப்பட்டிருக்கும் டிராம் பாதையில் ஓடத்தக்க ஒரு டிராம் வண்டியைச் செய்தனுப்பும்படி உடனேயே ஒரு லண்டன் கம்பெனிக்கு ஆர்டர் கொடுத்தார். இரண்டு மாதத்தில் வண்டியும் வந்து சேர்ந்தது. ஒருநாள் காலையில் பிரிஸ்டசின் வானவில் வர்ணம் தீட்டப்பட்ட டிராம் வண்டி தனது பிரயாணத்தை ஆரம்பித்தது. இதற்குக் கண்டக்டர் பிரிஸ்டஸ்தான். நகராட்சியினர் ஏற்படுத்தி இருந்த கட்டண விகிதங்களைவிட இந்தப் புதிய டிராமுக்குச் சார்ஜ் குறைவுதான். எனவே கூட்டத்துக்குக் கேட்பானேன்.

சிறிது நேரத்தில் இந்தப் போட்டி டிராம் ஓடும் விவரம் நகரெங்கும் பரவி, டிராம்வே அதிகாரிகளுக்கு எட்டிற்று. டிராம்வே இன்ஸ்பெக்டர் வழி மறித்து, வண்டியைப் பாதைவிட்டு அகற்றும்படி சொன்னார். பிரிஸ்டசா இணங்கக் கூடியவர்? இன்ஸ்பெக்டரல்ல, வேறு யார் வந்து சொன்னாலும், பாதையை விட்டு வண்டியை அகற்றப் போவதில்லையென்று சொன்னதுடன், இன்ஸ்பெக்டரிடமும் தம் வண்டியில் பிரயாணம் செய்ததற்குரிய கட்டணத்தைக் கொடுக்கும்படி கேட்டார்.

அடுத்தபடியாக ஒரு போலீஸ் கோஷ்டியுடன் டிராம்வே உத்யோகஸ்தர்கள் வந்து பிரிஸ்டசைக் கைது செய்வதாகப் பயமுறுத்தினார்கள். அதற்கும் பிரிஸ்டஸ் விட்டுக்கொடுக்கவில்லை. 'என்னைக் கைது செய்யுமுன் உங்கள் அதிகாரப் பத்திரத்தைப் பரிசீலனை செய்யுங்கள்' என்றார். அவர்கள் மறுநாள் நகராட்சியினரின் டிராம் வண்டிகளைத் தடுத்ததாக அவர்மீது வழக்குத் தொடுத்தனர். பிரிஸ்டஸ் சும்மா இருக்கவில்லை. எஞ்சினீயரிங் நிபுணர்களை அழைத்து அன்றே இதற்கு ஒரு வழியைச் செய்து கொண்டார். அவர்கள் இராப்பகலாக வேலை செய்து ஒரு புதிய யந்திரத்தை அந்த டிராம் வண்டியோடு இணைத்தனர். மறுநாள் வழக்கம்போல் பிரிஸ்டசின் டிராம் ஓடிற்று. முனிசிபல் டிராம் எதிரே வந்தால், பிரிஸ்டஸ் அந்த யந்திரத்தைப் பிடித்து அழுத்துவார். உடனே அவரது டிராம் பாதையை விட்டு விலகி அப்பால் ஓடும். அந்த டிராம் கடந்து சென்ற பின் பிரிஸ்டஸ் டிராம் மீண்டும் பாதைக்குச் செலுத்தப்படும். எனவே, இதன் பிறகு அவர்மீது முனிசிபல் வண்டிகளைத் தடுத்ததாகவும் குற்றம் சாட்ட முடியவில்லை நகராட்சியினரால்.

முனிசிபல் டிராம் பாதையை ஆக்கிரமித்ததாக அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது. எல்லாருக்கும் பொதுவான வீதிகளில் தண்டவாளங்கள் போடப்பட்டிருப்பதால் பாதசாரிகளைப் போல அவற்றைக் கடந்து செல்லத் தமக்கும் உரிமையுண்டு என்று பிரிஸ்டஸ் வாதாடினார். மேலும், வேறுயாரும் அந்தப் பாதைகளை பயன்படுத்தக் கூடாதென்று சட்டப்படியோ பத்திரப்படியோ தடுக்கப்படவில்லையென்பதையும் அவர் எடுத்துக் காட்டினார்.

பின்னர், நகராட்சியினர், மின்சாரத்தைத் திருட்டுத் தனமாக உபயோகித்துக் கொண்டதாக பிரிஸ்டஸ்மீது குற்றஞ் சாட்டினர். கம்பெனியார் பில் அனுப்பாதது தான் தவறென்றும் தாம் உபயோகித்த மின்சாரத்தின் அளவை; வண்டியிலிருக்கும் மீட்டர் காட்டுவதாயும் சொன்னார் பிரிஸ்டஸ். இவ்வித வழக்குகளுக்கு மத்தியிலும் அவரது ஒற்றை டிராம் வண்டி லாபகரமாகவே ஓடிக்கொண்டிருந்தது. எல்லாம் தமக்குத் தோல்வியாக முடியவே, கம்பெனியார் தங்கள் தண்டவாளங்களின் அளவுகளையும், சக்கரங்களையும் மாற்றி அமைத்தனர். அவற்றிற்கேற்றாற் போல பிரிஸ்டஸும் மாற்றிக் கொண்டே வந்தார். வண்டி ஓடிக் கொண்டிருக்கும் போதே மின்சாரத்தை நிறுத்தினர் நகராட்சியினர். அது அவர்கள் வண்டிகளையும் ஓடமுடியாமல் செய்தது. தங்கள் வண்டிகளைக் கொண்டு மோதி உடைக்க முயன்றனர். மோதினாலும் உடையாதிருக்கத் தக்க பாதுகாப்பைச் செய்து தடுத்தார் பிரிஸ்டஸ்.

கடைசியாக மறியல் செய்து, வண்டியை அங்குமிங்கும் போகாதபடி தடுத்துவிட முயன்றனர். ஆனால், அவர்கள் வண்டியிலில்லாத ஒரு யந்திர அமைப்பு பிரிஸ்டஸின் வண்டியிலிருந்ததால் அந்த வண்டிகளைத் தாண்டி தமது வண்

(12-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கமுடியாது என்று ஆவேச மொழிகளை வீசினார்! பார்த்தது பிரிட்டன்! இந்தியா தன் பக்கம் இருப்பதால் நேரிடக்கூடிய எண்ணற்ற நன்மைகளை இழக்கவும் விரும்பவில்லை பிரிட்டன்! அதே நேரத்தில் தன் மன்னருக்குப் பக்தி செலுத்தாமல் இந்தியா காமன்வெல்தில் இருப்பதையும் அது விரும்பவில்லை! இந்தியாவும் காமன்வெல்தில் இருக்க வேண்டும், அது மன்னருக்குப் பக்தியும் செலுத்தவேண்டும், ஆனால் நேருவோ பக்தி செலுத்த மறுக்கிறார், இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்று எண்ணி எண்ணிப் பார்த்தனர் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள்! இறுதியில், காமன்வெல்த்தில் இந்தியா இருப்பதற்கு ஏற்றதாகவும், இந்தியாவை பிரிட்டிஷ் மன்னருக்குப் பக்தி செலுத்தும்படி செய்வதாகவும், அதே நேரத்தில் அந்தப் 'பக்தி'க்குப் பெயர் பக்தி என்பதாக இல்லாமல் வேறொன்றாக இருக்கத்தக்கதாகவும், இந்தப் 'புது நிலையை நேரு ஒப்புக்கொள்ளக் கூடியதாகவும் அமைந்த ஒரு திட்டத்தை பிரிட்டன் சமர்ப்பித்தது நேருவுக்கு—நேரு ஏமாந்தார்—பிரிட்டன் வென்றது—மன்னரின் மணிமுடிக்கு பக்தி செலுத்தச் சம்மதித்து விட்டார் நேரு அவரை அறியாமலே!

"நாங்கள் இந்தியக் குடியரசின் உறுப்பினர்கள்! எனவே வேற்று நாட்டு முடியரசருக்குப் பக்தி செலுத்த முடியாது" — கூறினார் நேரு!

"ஆகா அதனாலென்ன குற்றம்! குடியரசைச் சேர்ந்த நீங்கள் எங்கள் முடிமன்னருக்கு நிச்சயம் பக்தி செலுத்தத்தான் முடியாது! அது எப்படி முடியும்?"—கேட்டது பிரிட்டன்!

"அதைத்தானே நானும் கூறுகிறேன்! எங்களால் மன்னருக்குப் பக்தி செலுத்தவோ முடியவில்லை! என்றாலும் காமன்வெல்தைச் சேராமல் இருக்கவோ விருப்பமில்லை! என்ன செய்வது என்றே புரியவில்லை! இதற்கு என்ன வழி என்றாலோ நீங்களும் கூறவில்லை!"—நேருவின் மறுமொழி!

"நாங்களும் அதைத்தானே எண்ணிக்கொண்டிருக்கிறோம்! நீங்கள் காமல்வெல்திலும் இருக்க வேண்டும்—அதே நேரத்தில் எங்கள் மன்னருக்குப் பக்தி செலுத்தாமல் இருப்பதற்கு ஒரு வழியும் உங்கட்கு இருக்கவேண்டும்!—மன்னருக்குப் பக்தி செலுத்தாவிட்டாலோ நீங்கள் காமன்வெல்தில் இருக்கமுடியாது! இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்பதுதான் எங்கட்கும் புரியவில்லை"—பிரிட்டனின் ராஜதந்திர சரளி!

"அப்படியானால் வழியே இல்லையா?"—நேரு கேட்டார்.

"யோசித்துத்தான் கூறவேண்டும்!...ஆம்! ஒரு வழி இருக்கிறது! மன்னரிடம் பக்தி செலுத்த முடியாது, ஏனெனில் நாங்கள் ஒரு குடியரசைச் சேர்ந்தவர்கள், குடியரசைச் சேர்ந்தவர்கள் ஒரு முடியரசருக்கு எப்படிப் பக்தி செலுத்த முடியும் என்பதுதானே உங்கள் ஆட்சேபம்?"—பிரிட்டன் கேட்டது.

"ஆம்! அதுதான்!"

"அதுசரி! ஆனால் ஒரு தலைவனிடத்தில் விசுவாசம் தெரிவிக்க உங்களுக்கு ஆட்சேபம் இருக்க முடியாதே!"

"அது எப்படி இருக்க முடியும்? குடியரசு என்றாலே குடியரசின் தலைவருக்கு விசுவாசமாக இருப்பது என்றுதானே அர்த்தம்?"

"அப்படியானால் ஒரு தலைவரிடத்தில் அடையாளபூர்வமான அன்பைத் தெரிவிக்க நீங்கள் மறுக்க மாட்டீர்களே?"

"மாட்டோம் மாட்டோம் ஒருக்காலும் மறுக்கமாட்டோம்! ஆனால் அதற்கும் இந்த காமன்வெல்த் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தமா? ஆயிரம் சம்பந்தம் இருக்கிறது! பிரிட்டிஷ் மன்னர் மன்னர் என்பதால்தானே நீங்கள் ஆட்சேபணை தெரிவிக்கிறீர்கள்?"

"ஆமாம் ஆமாம் ஆமாம்! எத்தனை முறை நான் சொல்வது?"

"மன்னரை, காமன் வெல்தின் தலைவர் என்று கொண்டுவிட்டால்......"

"நாங்கள் அவருக்கு விசுவாசம் தெரிவிக்கத் தடையே இல்லை! அற்புதமான யோசனை! அபாரமான அறிவுத்திறமை படைத்தவர்கள் மட்டுமே இதுபோன்ற யோசனையினைக் கூற முடியும்!"

"சே! சே! அதெல்லாம் ஒன்றுமில்லை! தங்களுடைய தீவிர ஒத்துழைப்பால்தான் இந்த நன்முடிவுக்கு நாம் அனைவரும் வரச் சாத்தியமாயிற்று. இல்லையா?"

இதுபோன்றதோர் உரையாடல் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கும் பண்டிதர் நேருவுக்குமிடையே நடந்ததோ இல்லையோ நாம் அறியோம், ஆனால் காமன்வெல்த் மாநாட்டின் முடிவும், மன்னரின் மணிமுடிக்கு விசுவாசம் தெரிவிப்பதா—ஒருக்காலும் முடியாது என்று கொக்கரித்துக் கொண்டிருந்த நேரு, பிரிட்டிஷ் மன்னரை, காமன்வெல்த் நாடுகளின் அடையாளபூர்வமான தலைவராக ஏற்றுக்கொண்டு அந்த விதத்தில் அவருக்கு விசுவாசம் தெரிவிக்க ஒப்புக்கொண்டிருப்பதும், நமக்கு உண்மையிலேயே திகைப்பையும் ஆச்சரியத்தையுமே தந்திருக்கிறது! இதுவரைநாம்பண்டித நேருவை சிறந்ததோர் ராஜதந்திரி என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தோம், ஆனால் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளாலே அவர் இவ்வளவு எளிதாக, இவ்வளவு விரைவில், இவ்வளவு அதிகமான அளவுக்கு ஏமாற்றப்பட்டிருப்பதைக் கண்ட பிறகு நமக்கு அவர்மீது பரிதாபந்தான் பிறக்கிறது! ராஜதந்திரக் கலையின் அரிச்சுவடியே தெரியவில்லையே இந்த ஆணழகருக்கு, ஒரே சரக்கு—அதற்கு முதலில் ஒட்டப்பட்டிருந்த லேபில் கிழித்தெறியப்பட்டு புதிய லேபில் ஒட்டப்பட்டதும் அதையே வேறு சரக்கு என்று எண்ணி ஏமாந்துவிட்டாரே இந்த டில்லி பிரதமர், விளக்கெண்ணெய் புட்டி மீது விளக்கெண்ணெய் என்று ஒட்டப்பட்டிருந்த சீட்டு கிழிக்கப்பட்டு, தேங்காய் எண்ணெய் என்று அச்சடிக்கபட்ட தாள் ஒட்டப்பட்டதும் உள்ளிருக்கும் விளக்கெண்ணெயைத் தேங்காய் எண்ணெய் என்று எண்ணி மிரண்டு விட்டாரே இம் மூதறிஞர், பழைய கள் புதிய மொந்தையிலே தரப்பட்டவுடனே அதனைப்புதிய கள் என்று எண்ணி ஏற்றுக் கொண்டுவிட்டாரே இம் மோதிலால் புத்திரர் இத்தகையவரை நம்பி இவர் கரத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதே இந்த இந்தியத் துணைக்கண்டம்—இது உருப்படுமா?

"பிரிட்டிஷ் மன்னருக்கு விசுவாசம் தெரிவிப்பது" என்று வாசகம் இருந்தாலென்ன, "பிரிட்டிஷ் மன்னரையே தலைவராகக் கொண்டு அந்தத் தலைவருக்கு விசுவாசம் தெரிவிப்பது" என்று வாச

கம் இருந்தாலென்ன, கருத்து ஒன்றுதானே! பூங்கா என்று சொன்னால் என்ன, பூந்தோட்டம் என்று சொன்னால் என்ன — இரண்டும் ஒன்றுதானே! தண்ணீர் என்று சொன்னால் என்ன, ஜலம் என்று கூறினால் என்ன, பானி என்று புகன்றால் என்ன, வாடர் என்று கூறினால் என்ன மொழி வேறு வேறே தவிர மொழியால் குறிக்கப்படும் பொருள் ஒன்றுதானே! சர்க்கரையை வேம்பு என்று அழைப்பதாலே அது கசந்துபோகுமா அல்லது எட்டியைத் தேன் என்று மாற்றி அழைப்பதாலே அது தித்தித்துவிடுமா?

ஒரேவிதமான பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அமைப்பு—ஒரே பிரிட்டிஷ் மன்னருக்கு விசுவாசம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை—இந்த இரண்டு பிரச்சினையிலும் துளியளவும் வித்தியாசமில்லை! ஆனால் மன்னர் முன்பு மன்னர் என்றே அழைக்கப்பட்டு பக்தி செலுத்தப்பட்டார்! இனி, இந்தியாவைப் பொறுத்தவரை, தலைவர் என்று அழைக்கப்பட்டு பக்தி செலுத்தப்படுவார்! இதுதான் வித்தியாசம்! எவ்வளவு மகத்தான வித்தியாசம்!! இந்த மகத்தான வித்தியாசத்தைக் கண்டு ஏமாந்து, நேரு, அடிமை முறிச்சீட்டில் கையொப்பமிட்டு சரணாகதி அடைந்தாரே பிரிட்டிஷ் ராஜதந்திரிகளிடம் — அது எவ்வளவு மகத்தான வெற்றி!! அந்த வெற்றியைக் கண்டு ஆனந்தக் கூத்தாடுகின்றனவே இந்த நாட்டுத் தேசிய ஏடுகள்—அவற்றின் அறிவு, எவ்வளவு அபாரம்!!

சோவியத் ரஷ்யர்வும் அதனைச் சேர்ந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் ஒரு புறத்திலே அணிவகுத்து நிற்கின்றன! அமெரிக்காவும் அதனைச் சார்ந்து நிற்கும் பிரிட்டனும், பிரிட்டனைச் சார்ந்து நிற்கும் நாடுகளும் மற்றொரு புறத்தில் அணிவகுத்து நிற்கின்றன! உலகம் இன்று இதுபோல இரண்டு போர் முகாம்களாகப் பிரிந்து நிற்கின்றன. இந்த இரண்டு அணிவகுப்புகளிலே, இந்தியா, எந்த அணிவகுப்பையும் சேர்ந்தது அல்ல—எந்த அணிவகுப்பிலும் சேராது என்று ஆயிரம்முறை அண்டம் அதிர முழக்கமிட்ட நேரு, இன்னமும்கூட விட்ட குறை தொட்ட குறை என்பதுபோல அந்தப் பழைய வாசனை காரணமாக சிற்சில சமயம் அதுபோல வீர கர்ஜனை புரிந்துகொண்டிருக்கும் நேரு, இதோ, லண்டன் மாநாட்டில், பிரிட்டிஷ் காமன்வெல்திலே ஒரு உறுப்பினராக இருக்கச் சம்மதித்து விட்டாரே, சம்மதித்து தன் கை ஒப்பத்தையும் அதற்கான சாசனத்திலே நாட்டிவிட்டாரே, சம்மதப் பத்திரம் கனடா முதலிய ஏனைய காமன்வெல்த் நாடுகளின் சாட்சிக் கையெழுத்துடன் உலக மன்றத்தின் முன் நீட்டப்பட்டுவிட்டதே, இந்தப் பத்திரம் இனி ஒரு நாளில் அமெரிக்க பிரிட்டிஷ் அணிவகுப்புக்கும் சோவியத் அணிவகுப்புக்குமிடையே சமர் நடக்குமானால், இந்தியா பிரிட்டனின் பக்கம் சேர்ந்து விடும் என்பதற்கான உறுதிமொழிதானே! அல்ல என்று நேரு இன்று மறுக்கலாம், இல்லை என்று மறைக்கலாம், அப்படி எல்லாம் கிடையாது என்று மழுப்பலாம் ஆனால் உண்மைப் பொருள் இந்தப் பத்திரத்திற்கு, இதுதானே! ரஷ்யாவை எதிர்த்து, பிரிட்டன், சென்ற ஆண்டு, பெல்ஜியம், பிரான்சு, முதலிய மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் ஒரு கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டது. பிறகு இந்த ஆண்டு, இந்த மேற்கு ஐரோப்பிய நாடுகள், பிரிட்டன், அமெரிக்கா, நார்வே இவை யாவும் ஒன்றுகூடி ரஷ்யாவை எதிர்த்து அட்லாண்டிக் ஒப்பந்தம் என்ற பெயரால் ஒரு கூட்டு அறிக்கை தயாரித்தன. ஐரோப்பாவிலும் அட்லாண்டிக் கடல் பிரதேசத்திலும் இதுபோல, தங்களுக்கு என்று பாசறைகளை அமைத்துக்கொண்ட பிரிட்டிஷ் — அமெரிக்க கூட்டுச் சக்தி, இதுபோது, மத்தியதரைக் கடலிலும் பசிபிக் கடலிலும் ஆசியாவிலும் எதிர்கால உலகப் போருக்கான பாசறைகளை அமைக்க முயன்றுகொண்டிருக்கிறது. அந்த முயற்சியிலே அமைந்த, முதல் கட்டம்தான் லண்டன் காமன்வெல்த் மாநாடு! இந்தச் சூழ்ச்சிப் பொறியிலே சிக்க மாட்டேன்—வல்லரசுகளின் விளையாட்டிலே நான் எந்தப் பக்கமும் சேரமாட்டேன் என்றுதான் கூறிக்கொண்டிருந்தார் நேரு ஆனால் இதோ சிக்கிவிட்டார்! சிலந்தியின் வலையிலே, நேரு தாமாகச் சென்று மாட்டிக் கொண்டுவிட்டார்! நேருவுக்கு இன்னமும் புரியவில்லை தாம் வலையிலே சிக்கிக்கொண்ட உண்மை! ஆனால் நமக்கு நன்றாகப் புரிகிறது நாம் வெளியே இருந்து பார்க்கும் காரணத்தால்!

* * *

சர்ச்சில், இந்தியா காமன்வெல்திலேயே இருக்க முடிவு செய்துவிட்டது என்பதைக் கேட்டதும், கட்டுக்கடங்காத களிப்பும் பூரிப்பும் அடைந்தாராம்! பத்திரிகைகள் கூறுகின்றன, அவர், சீமைப் பாராளுமன்றத்திலே இது குறித்துப் பேசியபோது அவர் குரலிலே ஒரு தனித் தெளிவும், தெம்பும், இனிமையும் இருந்தன என்று! "ஒரு குடி அரசாகிய இந்தியா நம் முடிமன்னரின் தலைமையை ஏற்றுக்கொள்ள முன் வந்ததிலிருந்தே மன்னராட்சி என்ற தத்துவத்தின் சிறப்பும் பெருமையும் ஒளி வீசித் திகழ ஆரம்பித்துவிட்டன" என்று சர்ச்சில், இறுமாப்போடு பேசி இருக்கிறார் பாராளுமன்றத்தில்! இந்தியக் குடி அரசை இவ்வளவு வெளிப்படையாகக் கிண்டல் செய்து பேசும் அளவுக்குக் குஷி பிறந்துவிட்டது சர்ச்சிலுக்கு நேரு இட்ட கையெழுத்தைக் கண்டு! குஷி பிறக்காமலா இருக்கும்! ஏகாதிபத்தியத்தின் பரம வைரியாகிய நேரு, ஏகாதிபத்திய சிங்கத்தின் பிடரியைப் பிடித்துக் குலுக்கிய மாவீரர் என்று புகழப்படும் நேரு, இன்று அந்த ஏகாதிபத்தியம் விரித்த வலையிலே சுலபமாகச் சிக்கிக்கொண்டுவிட்டார் என்பதைக் கண்டால், ஏகாதிபத்தியத்தின் நடமாடும் சின்னமாகிய சர்ச்சில் எப்படிக் களிப்புறாதிருக்க முடியும்?

பிரிட்டிஷ் காமன்வெல்திலே தொடர்ந்து இருக்கச் சம்மதித்து, நேரு, கையெழுத்துப் போட்டிருக்கிறாரே, அந்தக் கையெழுத்து, ரஷ்யாவை எதிர்த்துப் போராடும் நிலைமைக்கு இந்தியாவை இழுத்துச் செல்ல நேரு தயாராக இருக்கிறார் என்பதைத் தெளிவாகக் காட்டும் அபாய அறிகுறி!

சர்ச்சில் களிக்கிறார் இச் சம்பவத்தைக் கண்டு! இந்தியத் துணைக் கண்டத்து நல்லறிவாளர்கள் அனைவருக்குமோ வேதனை பிறக்கிறது இந் நிலைமையை எண்ணினால்! சர்ச்சிலுக்குக் களிப்பூட்டும் சம்பவம் இந்தியாவுக்கு நன்மை தருவதாகவா இருக்கும்? அது எப்படி இருக்கும்? சர்ச்சில் என்றாலே இந்தியாவின் பரம விரோதி என்றல்லவா இந்திய அனுபவம்

(12-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பதுபோல, அன்றன்றாடம் எழுத்துக்களைத் தானே உருக்கி வார்த்து தானே கம்போஸ் செய்து தானே அச்சியற்றி மீண்டும் ஈயமாக உருக்கி மறுநாளைக்கு மீண்டும் புத்தம்புது எழுத்தாக உருக்கி வார்த்துக் கொள்ளும் 'லினோ' மிஷின்களைத் தமிழில் அமைக்க முடியாமல் இருப்பதற்கும் காரணம்! 'ஹிந்து' ஏட்டில் உள்ள எழுத்துக்கள் கொஞ்சமும் தேயாமல் ஒவ்வொரு நாளும் புதிதாக இருக்கின்றன என்றால் அதற்குக் காரணம் இதுதான்! தமிழ்ப் பத்திரிகைகளிலோ எழுத்துக் கம்பெனியிலிருந்து ஆறுமாதம் அல்லது ஓர் ஆண்டுக்கு ஒரு முறை எழுத்துகளை வாங்கி அந்த ஆண்டு முழுவதும் அதே எழுத்துகளை மீண்டும் மீண்டும் அச்சடிக்கிறோம். இந்தக் காரணத்தால் எழுத்துகள் உடைந்தும் தேய்ந்தும் அழகு குன்றியும் உருக்குலைந்தும் போய்விடுகின்றன. தமிழ் எழுத்துகள் நாற்பது அல்லது ஐம்பது என்ற எண்ணிக்கைக்குக் குறைக்கப் பட்டுவிட்டால் தமிழிலும் லினோ மிஷின் கண்டுபிடிக்கப்பட்டு ஆங்கில ஏடுகளைப் போல தமிழ் தினசரிகளையும் அழகிய முறையில் கொண்டுவருவது எளிதாகும். தமிழ் அரசியலார் மொழியாகவும் ஆகும் நிலை வந்துகொண்டிருக்கிறது, அதோடு நூற்றுக்கு 85 பேர் தமிழகத்தில் இன்னமும் தமிழே கல்லாத நிலையில் உள்ளனர். இவர்களுக்காகக் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் ஒன்று வகுத்து ஒரு பத்தாண்டுக் காலத்தில் இவர்கள் அனைவரையும் தமிழ் கற்றவர்களாக ஆக்கும் பணியை சர்க்கார் மேற்கொண்டாக வேண்டி இருக்கிறது. தமிழ் விரைவில் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகத்திலும் போதனை மொழியாகவும் ஆகப் போகிறது. இவ்வளவு மாறுதல்களும் எளிதில் நடைபெற்று, தமிழ் சிறப்புற்றுத் திகழ வேண்டுமானால், இந்த மாறுதல்கள் தொடக்கமாவதற்குள் தமிழ் எழுத்துக்கள் குறைய வேண்டியது அவசியம்.

6. திராவிடர் கழகம் நாஸ்திகர் கழகம் அல்ல என்று கூறுகிறீர்கள்! ஆனால் அதே சமயத்தில் கழகத்தின் முக்கியஸ்தர்களும் தலைவர்களும் நாஸ்திகர்களாகவே இருக்கின்றனர்! இதற்கு என்ன சமாதானம் கூறுகிறீர்கள்?

திராவிடர் கழகத்தில் இருக்கும் சிலர்—அந்தச் சிலர் தலைவர்களாயினும் சரியே, அன்றித் தொண்டர்களாயினும் சரியே—நாஸ்திகர்களாக இருக்கிறார்கள் என்பதாலேயே கழகத்தில் இருக்கும் அத்தனைபேரும் நாஸ்திகர்கள் என்பதாக எப்படி ஏற்பட்டுவிடும்? திருச்சிறாப்பள்ளியில் வாழ்பவர்களில் இருநூறு பேர் நாஸ்திகர்களாக இருக்கிறார்கள் என்றால் அதனால் திருச்சிறாப்பள்ளியே நாஸ்திகபுரி ஆகிவிடுமா? திராவிடர் கழகத் தளபதி அண்ணாதுரை 'ரொம்பக்' குள்ளம், அவரைவிடக் குள்ளம் தோழர் ஏ. பி. ஜனார்த்தனம், அவரைவிடக் குள்ளம் தோழர் மு. கருணாநிதி, அவரைவிடக் குள்ளம் தோழர் டி. கே. சீனிவாசன், தோழர் சீனிவாசனைவிடக் குள்ளம் இளஞ்செழியன், இவர்கள் அத்தனை பேரும் திராவிடக் கழகத்தவர்கள் எனவே திராவிடர் கழகம் ஒரு குள்ளர்கள் கட்சி என்று யாராவது சொன்னால் எப்படி இருக்குமோ அப்படித்தான் இருக்கிறது திராவிடக் கழகத்தவர்கள் சிலர் நாஸ்திகர்களாக இருக்கிறார்கள். ஆகவே திராவிடர் கழகமே ஒரு நாஸ்திகர் கட்சிதான் என்று கூறும் உமது போக்கு!

7. "வலிவு பெருகி ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தால்தான் நாட்டிற்கான நல்ல திட்டங்களை நிறைவேற்றி வைக்க முடியும் என்ற கருத்து திராவிடக் கழகத்தாரின் ஒரு பகுதியினரிடத்தே வளர்ந்து வருகிறது என்பதையும் அரசிலார் அறிந்திருக்கட்டும்'—இது 21-1-49 "திராவிட நாடு" இதழில் "உடுமலை கற்பிக்கும் பாடம்" என்ற கட்டுரையில் கடைசிப் பத்தியில் உள்ளது. தேர்தலைப் பற்றி நீங்கள் அடிக்கடி கூறிவரும் கருத்துக்கு இந்தக் கருத்து மாறுபடுகிறதே ஏன்?

மாறுபடுகிறது என்று யார் கூறியது உங்களுக்கு? நாங்கள் 'தேர்தலைப்பற்றி அடிக்கடி கூறிவரும் கருத்துக்குப்' இந்தக் கருத்துக்குமிடையே எத்தகைய மாறுபாடும் இல்லை! "நாங்கள் அடிக்கடி கூறிவரும் கருத்து" திராவிடர் கழகம் இப்போது தேர்தலுக்கு நிற்காது என்பதுதானே! **இப்போது** தேர்தலுக்கு நிற்கயாட்டோம் என்பதாலேயே **எப்போதும்** நிற்கமாட்டோம் என்று அர்த்தம்? அப்படி நாங்கள் இப்போதும் கூறுவதில்லை, எப்போதும் கூறியதில்லையே! இன்று இல்லாவிட்டால் நாளை, நாளை இல்லாவிட்டால் பிறிதோர் நாள், கழகம், தேர்தலுக்கு நிற்கத்தான் போகிறது. அதிலே யாருக்கும் ஐயம் இருக்கத் தேவையில்லை. ஆனால் ஐயத்திற்குரிய பிரச்சினை, கழகம் தேர்தலில் போட்டியிடும் நாள் என்று வரும்—நாளைக்கா? மறுநாளா? அதற்கடுத்தநாளா? பிறிதோர் சமயமா? என்பதுதான்! திராவிடக் கழகத்திலே சிலர், நாம் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஏற்ற காலம், பொருத்தமான சமயம், பக்குவமான நாள் இப்போதே வந்துவிட்டது—விரைவில் நாம் தேர்தலுக்கு நின்றாக வேண்டும் என்று கருதுகின்றனர். ஆனால் வேறு சிலர், இவ்வளவு சீக்கிரம் நாம் தேர்தலுக்கு நிற்கத் தேவையில்லை, இன்னும் சில ஆண்டுகள் பொறுத்து நிற்பதுதான் நல்லது—அதுதான் சரி என்று கருதுகின்றனர், இந்த இரு சாராருமே பொதுவாக 'வலிவு பெருகி, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தால் தான் நாட்டிற்கான நல்ல திட்டங்களை நிறைவேற்றி வைக்க முடியும்' என்றுதான் கருதுகின்றனர். இதைத்தான் "திராவிடநாடு" 24-4-49ல் எடுத்துக்காட்டியிருக்கிறது. இதற்கும், "திராவிடநாடு" உட்பட திராவிடக் கழகத்தவர்கள் அத்தனைபேரும் சாதாரணமாகச் சொல்லிவரும் "நாங்கள் இப்போது தேர்தலுக்கு நிற்கமாட்டோம்" என்ற கருத்துக்குமிடையே என்ன மாறுபாடு இருக்கிறது? இன்னமும் சொல்லப்போனால் நாங்கள் **இப்போது** தேர்தலுக்கு நிற்கமாட்டோம் என்று கூறுவதிலேயே, **பிறிதோர் சமயம்** நிற்கத்தான் போகிறோம் என்ற கருத்து தொக்கி நிற்கவில்லையா? பாலிலே வெண்ணெய் தொக்கி நிற்கிறது—ஆனால் தெளிவாகத் தெரியாது—பால்

தயிரானால்தான் வெண்ணெய் தெளிவாகத் தெரியும். அதுபோலத்தான் எங்கள் பழைய கருத்திலே இந்தப் புதிய கருத்தும் தொக்கிநிற்கிறது என்பது கொஞ்சம் கூர்ந்து கவனித்தால்தான் நன்றாகத் தெரியும்.

### 8. திராவிடத் தனியரசு உருவாகுமானால் அதனால் ஆதித்திராவிடருக்கு என்ன லாபம்?

ஒரு முறை, தலைவர் பெரியார் அவர்கள், இதே கேள்வி அவரிடம் கேட்டபோது அவர் அளித்த சுவையான பதிலை அப்படியே தருகிறேன்:—

"திராவிடத் தனியரசு உருவாகுமானால் அதனால் ஆதித்திராவிடருக்கு எவ்வித இலாபமும் இல்லை! ஒரே ஒரு மகத்தான நஷ்டம்தான் உண்டு! அந்த நஷ்டத்தை அனுபவிக்கத்தான் அவர்களை இருகை கூப்பி அழைக்கிறேன். அது என்ன நஷ்டம் தெரியுமா? அவர்களுடைய பெயரின் முன்னால் இருக்கிறதே ஆதி என்ற சொல், அந்தச் சொல்லை அவர்கள் இழந்துவிடுவர், திராவிடநாடுதான் உருவானால்! இலாபம் எதுவும் கிடையாது இந்த நஷ்டம்தான் உண்டு!"

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வழங்கினர். பாராட்டுக் கடிதங்கள் அனுப்பினர்.

அந்தக் கண்ணாடியின் உதவிகொண்டு வானவெளியை நோக்கினார். வழங்கினார் பல புதுப் புதுக் கருத்துக்களை. விண்மீன் கூட்டங்களால் சமைக்கப்பட்டதே Milky way என்று ஆங்கிலத்திலழைக்கப்படும் பாதை என்றார், டாலிமி என்ற கிரேக்க அறிஞர் பூமியே கோளங்களின் மத்தியென்றும் சூரியனும் மற்றக் கிரணங்களும் அதைச் சுற்றி வருகின்றன என்றும் கூறினார். கலீலியோ அது பெரிய உளறல், சூரியனே கோளங்களின் மத்தி, இது எனது சொந்த யுக்தியல்ல, ஆராய்ந்ததின் விளைவாக என்புத்தி சொன்னதல்ல. கண்கூடாகக் கண்டது. என் கண்ணாடி கண்கூடாக எனக்குமட்டுமல்ல உங்களுக்கும் காட்டும். எனக்கு முன்னரே காப்பர்னிகஸ் இதைக் கண்டார். பின்னர் வியாழனைச் சுற்றிச் சில கிரணங்கள் சுற்றுகின்றன என்றார்.

அந்தக் காலத்திலே அச்சத்தினடிப்படையிலே அறியாமைக் கற்களால் அடுக்கி யடுக்கியமைக்கப்பட்டது மதமென்னும் மாளிகை! அங்கே மக்கள் பலரை மன்றாடிக் கூட்டினர், வெறியாட்டம் நிகழ்த்தினர், கடவுளென்று கண்டதையெல்லாம் கண்மூடித்தனமாக நம்பச் செய்தனர். அவ்வித மதக்காரரின் மார்க்கபோதனையின் ஒரு பகுதி இதோ: "அழகு ஆபத்து வேளையில் ஏற்படும் நெடுமூச்சு. உலகம் நிலையற்ற ஓர் ஒளி. இன்பம் என்பது படுபாதகம். மனிதன் அதில் மயங்கி வீழ்கிறான். இறப்பே என்றும் இறவா உண்மை. இன்பவெறுப்பும் இவ்வுடலில் பற்றின்மையுமே வாழ்க்கையின் வளமான நெறிகள். இதுதான் மூன்று நூற்றாண்டுகளுக்குமுன்வரை மேலைநாடுகளில் மலிந்து கிடந்த உண்மைகள்." அதை விளக்க அநேக ஆலயங்கள்! வழிபடப் பல வர்ணமிட்ட வடிவங்கள்! குற்றங் குறைகளைக் குறுக்கேயிருந்து கூறிடக் குருமார்கள்! மதத்தை எதிர்ப்பவரை மட்டந்தட்டப் பெரிய நீதி மன்றம்! இது மார்க்கக்காரரின் மண்டல ஆட்சியின் மகத்தான அரசியல் அமைப்பு முறை.

இந்த ஆட்சியிலே ஆளுக்குச் சிறைமட்டுமல்ல, அறிவுக்கே சிறை! எந்த மனிதனும் சொந்த அறிவுக்குச் சுயேச்சை யளிக்கக் கூடாது. ஆர அமர எண்ணிப் பார்க்கத் தொடங்குபவன் ஆண்டவனின் விரோதி என்று எண்ணும் ஏமாளிகளினிடையே தான் கலீலியோ கணக்கற்ற புதுமைகளை வெளியிட்டுவந்தார். மதக்காரர்கள் அவரைக் கண்டித்தனர், எதிர்த்தனர். கலீலியோ போப்பாண்டவரிடமே போய்த் தனது புதிய கருத்துக்களை விளக்கினார். பலர் அதை ஆராய்ந்தும் கலீலியோவைக் குற்றப்படுத்த முடியவில்லை.

ரோமிலே பெருவாரியான மக்கள் வரவேற்றனர், பெரிய பெரிய மேடைகளிலே தனது கருத்துக்களை மிக விரிவாக எடுத்துக் கூறினார். பரிசோதனைகள் செய்து காட்டினார் என்றாலும் மதத்தையே மட்டித்தனமாகக் கட்டிப் பிடித்திருக்கும் சில குட்டை மதியினர்யாங்கள் அரிஸ்டாட்டிலையும் டாலிமியையும்தான் நம்புவோம் காப்பர்நிகசும் கலீலியோவும் மதவிரோதிகள். நாக்கில் நரம்பற்ற நாஸ்திகர்கள், என்றோலமிட்டனர். கடைசியிலே கலீலியோ கண்ட உண்மைகளை மறுக்க முடியாவிட்டாலும், ஏசுவின் கட்டளைகளை எதிர்க்கிறார், விவிலிய நூலையே பொய்யாக்கப் பார்க்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டார். நீதி மன்றத்திலே நிறுத்தப் பெற்றார். புதிய கருத்துக்களை இனிப் பரப்பக் கூடாது என்ற கட்டளையுடன் விடுதலை யடைந்தார்.

ஆனால் 1632-ல் "உலகப்பேரிரண்டு திட்டங்களைப்பற்றிய உரையாடல்" (Dialogues of the two Systems of the World) என்ற நூலை வெளியிட்டார். அதிலே போப்பினிடத்திலே இருக்கும் பாத்திரத்திற்கு (Simpleton) என்று பெயரிட்டார். போப்புக்கு ஆத்திரம் வந்தது. உடனே ரோமுக்குக் கலீலியோவை வரவழைத்தார். அவர் எந்த நண்பனையும் பார்க்கக் கூடாது என்றும் உத்தரவிட்டார். அந்தோ! அறிவின் உருவைச் சிறையிட்டனர். மூன்றாண்டுகள்வரை இறைவனைப் பற்றிய பாடல்களைப் பாடச்செய்தனர். நீதிமறைத்தின் முன் மண்டியிடச் செய்தனர். கொடுமை! கொடுமை!! விடுதலை பெற்றவுடன் வேதாந்தம் படிக்கவில்லை. மீண்டும் வானக்கலையைப் பற்றி ஓர் நூல் ஹாலந்திலே வெளியிட்டார்.

எண்பதாம் வயதில் கண்களையிழந்தார். கண்ணொளி மழுங்கியும் கருத்தொளி மழுங்காமையால் பிறகும் மக்களின் கண்களிலே வெண்ணிறத் தாடியுடன் தோல் சுருங்கிய உடலுடன் காட்சி அளித்தார். 8—1—1642-ல் மறைந்தார்.

---

முத்தியாலுப்பேட்டை
**திராவிடர் கழகம்**
# பொதுக் கூட்டம்!
நேரம்: 8—5—49 ஞாயிறு
மாலை 6-மணி
இடம்: ஜீல்ஸ் தெரு
தலைவர்: மா. இளஞ்செழியன்
B.A. Hons
பேச்சாளர்கள்:
N. ஜீவரத்தினம் M.C.
E.V.K. சம்பத்

(6-ப் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமா — நமது சர்க்காரை, காங்கிரஸ் சர்க்காரை, நமது முயற்சியால் உருவான சர்க்காரை, தேசிய சர்க்காரை, தேசபக்தர்களின் சர்க்காரை, அடிக்கடி குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துகிறீர்களே, இது நியாயமா, கருணை என்பது உங்கட்குக் கிடையாதா'' என்று கனிவான குரலில், மிகத் தணிவான முறையில், கெஞ்சிக் கேட்கும் தோரணையில் பேசி இருக்கிறார். நாடாளும் சர்க்கார், வெள்ளை சர்க்கார் அல்ல, நமது சர்க்கார், எனவே குற்றம் சொல்வது கூடாது, கருணை காட்டுவதே முறை என்று கருத்துரை வழங்கியிருக்கிறார் கனவான் பட்டாபி.

“வேற்று நாட்டாரின் ஆட்சியின்கீழ் நம்நாடு இருந்தபோது, இதழாசிரியர்கட்கு அதிகமான சுதந்தரம் வேண்டும் என்று கேட்கப்பட்டது நியாயம்! ஆனால் இப்போது நமது சொந்த சர்க்கார் நாட்டை ஆளுகிறது! ஆகவே இப்போது அந்நியர் ஆட்சியின்போது இருந்ததைவிட எழுத்துரிமை குறைவாகத்தான் இருக்கும்—அப்படித்தான் இருக்கவேண்டும் — அதுதான் முறை! பத்திரிகாசிரியர்கள் தங்கள் சுதந்தரத்தின் ஒரு பகுதியை தாங்களாகவே முன்வந்து தியாகம் செய்துவிடவேண்டும் என்பது என் ஆசை! வெள்ளையர் ஆட்சியின்போது பத்திரிகைகள் சர்க்காரைத் தாக்கும் ஈட்டிமுனைகளாக இருந்தது நியாயம், ஆனால் இப்போது நம் சொந்த சர்க்கார் நாடாளும்போதும் அப்படிச் செய்யலாமா—அது முறையா—நியாயமா? பத்திரிகைகள் இனி தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும் — சர்க்காரைக் குறை சொல்வதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொள்ளவேண்டும்'' — டாக்டர் பட்டாபி இதுபோலப் பேசியிருக்கிறார் மைசூரில்! இந்தப் பேச்சு, குற்றம் செய்த மகனை போலீசார் கைது செய்ய வந்தபோது, தாய், போலீசார் மீது சீறி விழுந்தும், சினந்து பேசியும், கெஞ்சிக்குறையிரந்தும், ஈவு இரக்கம் இல்லையா கருணை காட்ட வேண்டாமா என்றும் கதறினாளே, அந்தக் கதறலைத்தான் ஒத்திருக்கிறது

குற்றங்கள் பல புரிந்த காந்தலிங்கத்தின் நிலைமையிலே இருக்கிறது நாடாளவந்த காங்கிரஸ் சர்க்கார் —அவர்கள் மக்களுக்கு இழைத் அப்படி அப்படியே கூறத்தான் துள்ள அநீதிகள் ஆயிரம் ஆயிரம்! அந்த காந்தலிங்கத்தின் கரத்திலும் காலிலும் விலங்குகளை மாட்டி அவனை போலீஸ் கோர்ட்டுக்கு இழுத்துச் செல்லும் போலீசாரின் நிலைமையிலே இருக்கின்றன பொறுப்புள்ள பத்திரிகைகள்—அவை, சர்க்காரை, அடிக்கடி அவர்கள் இழைக்கின்ற குற்றங்களுக்காக, மக்கள் மன்றம் என்ற வழக்கு மன்றத்திலே கொண்டு வந்து நிறுத்துகின்றன! அதாவது, தம் கடமையைக் குறைவறச் செய்கின்றன — நியாயத்தை நிலைநாட்டுகின்றன! காந்தலிங்கத்தைக் கைது செய்யும்போது கதறி அழுதாளே தாய், கெஞ்சினாளே கருணை கருணை என்று, கூவினாளே இரக்கம் சிறிதும் இல்லையே ஈசனே சிவகாமி நேசனே என்று, அந்த நிலையிலே இருக்கிறார் டாக்டர் பட்டாபி—காங்கிரஸ் சர்க்கார் மீது கொஞ்சமாவது இரக்கம் காட்ட வேண்டாமா என்று கேட்கிறார்! ஆனால் தாய் கதறி அழுகிறாள் என்ற காரணத்திற்காக, குற்றவாளி காந்தலிங்கத்தை (சர்க்காரை) கூண்டில் ஏற்றாமலா இருக்கமுடியும் போலீசாராகிய (இதழாசிரியர்களாகிய) நாம்? காந்தலிங்கம் (சர்க்கார்) நியாயத்தையும் நேர்மையையும் கொலை செய்தபோது, மனித சமுதாயத்தின் நன்மைக்காகப் பாடுபடும் உத்தமர்களைத் தடியால் அடித்து நொறுக்கியபோது, ஊருக்கு உழைக்கும் உயர் குணவான்களைக் காட்டிலும் மேட்டிலும் (சிறையில்) போட்டு வாட்டியபோது, இன்று ஐயையோ என் மகனுச்சே என்று கதறி அழும் இத் தாய் அன்று எங்கே போனாள்? ஏன் இவள், தன் மகனை (சர்க்காரை) குற்றம் செய்யாதேடா குணநிதியே என்று கூறி, அன்று (மக்கள் உரிமைகளைப் பறிக்கும்) குற்றம் செய்யாதபடி தடுக்கவில்லை?

---

**இளவரசி**

அடுத்த இதழில்!

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற அகராதியில் மக்கள் தியாகம் என்ற சிகப்பு மையாலே தெளிவாக அச்சடிக்கப்பட்டிருக்கிறது?

பண்டித நேரு தன் வாழ்நாளிலே செய்த பெருந்தவறு இந்தியாவை பிரிட்டிஷ் காமன்வெல்த்திலே இணைத்துவைத்த இந்த சம்பவம் என்பதை இந்தியாவின் எதிர்காலம் கட்டாயம் கூறும்!

சர்ச்சிலுக்குக் களிப்பூட்டும் இச்சம்பவம், இந்தியர்க்கெல்லாம் வேதனையூட்டும் சம்பவம்! சுதந்தரம் பெற்ற இந்தியா, தன் சுதந்தரத்தின் ஒரு பகுதியை மீண்டும் பிரிட்டனிடம் அடகு வைத்துவிட்ட கோரமான சம்பவம்! பிரிட்டிஷ் மன்னரை காமன்வெல்த் தலைவராகக் கொண்டு அவருக்குப் பக்தி செலுத்த நேரு ஒப்புக்கொண்டுள்ள சரணாகதிச் சம்பவம்!

ஒவ்வொரு இந்தியனும் தலை குனியவேண்டும் பிரிட்டிஷ் ராஜதந்திரத்தின் முன்னால் இந்தியப் பிரதமர் தோற்றுப்போன இச்சம்பவத்தைக் கண்டு!

ஒவ்வொரு காங்கிரஸ்வாதியும் வெட்கப்படவேண்டும் தங்கள் கட்சித் தலைவரின் செயல் நாட்டுக்குத் தேடித்தந்த இந்த அவமானத்தைக் கண்டு!

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டியை ஓட்டிச்செல்ல முடிந்தது. லிஸ்பன் நகரவாசிகளெல்லாம் பிரிஸ்டஸ் பக்கம்தான்! அவர் வண்டியில் எப்போதும் ஒரே கூட்டம்! நகராட்சியினருக்கு பயம் பிடித்துவிட்டது. போட்டி பலமாகி விட்டால், தங்களுக்கு பெரு நஷ்டம் வந்துவிடுமே என்று கடைசியாக சமரசம் பேசவந்தார்கள். பிரிஸ்டசின் வண்டியை 3000 பவுன் கொடுத்து விலைக்கு வாங்கிக் கொள்கிறோமென்றார்கள். 30,000 க்குக் குறைந்துபேச வேண்டாமென்று பதில் வந்தது. நகராட்சியினர் வேறு வழியின்றி கடைசியில் அப்பெருந் தொகையைக் கொடுத்து விலைக்கு வாங்கிக் கொண்டாராம்! எப்படி பிரிஸ்டசின் சாமர்த்தியம்! வெறும் 'மூளை'யை வைத்தே முப்பதாயிரம் சம்பாதித்து விட்டாரே மன்னன்!

---

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon